**கவனிக்க.**-2020.06.04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.



# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2180 - 2020 ජූනි මස 12 වැනි සිකුරාදා - 2020.06.12

*2180 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)



| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 584 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 580 | நானாவித அறிவித்தல்கள் | - |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, யூலை மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, யூன் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

.'ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

579-B 82029-405 (2020/ 06)

# ஆயவிற்பனையும் குத்தகையும்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவு

*கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை*

*2020 யூலை – 2021 யூன்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982, ஒகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 1982 ஆம் ஆண்டின் கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி பிரதேசத்திற்குட்பட்ட கள்ளுத்தவறணைக்கான 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2021, யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐநூறு ரூபா (ரூபா 1,500) பணத்தை ஆரையம்பதி பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். இக்கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2020.06.15 ஆந் திகதி முதல் 2020.06.25 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதிச் சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15 வீதத்திற்கு குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதிச் சான்றிதழ் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் பிழையாக நிரப்பப்பட்டிருந்தால் அவை நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்குச் செலுத்திய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நாளில் இருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களைப் பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பி சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

6. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். (நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012/01/05 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)

7. ஏனைய விபரங்கள் ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(திருமதி) ந. சத்தியானந்தி,
பிரதேச செயலாளர்,
மண்முனைப்பற்று.

பிரதேச செயலகம்,
மண்முனைப்பற்று.
2020, மே 29.

**அட்டவணை**

| கள்ளுத் தவறணைக்குரிய பிரதேச செயலகப் பிரிவு | தவறணை அமைய வேண்டிய இடம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| மண்முனைப்பற்று | ஆரையம்பதி தெற்கு கிராம அலுவலர் பிரிவு | 2020.06.26 | மு.ப. 9.30 மணி |

**குறிப்பு**.- 1. கேள்விச் சபை 2020.06.26 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்குக் கூடும்.

2. விற்பனைத் தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு விற்பனை 2020.07.03 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

6-71

---

## மாதம்பை பிரதேச செயலாளர் பிரிவு

2020, யூலை மாதம் முதல் 2021, யூன் மாதம் வரை

கள்ளுத் தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் 2020-2021

2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள கள்ளுத்தவறணைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் பொது நிபந்தனையாகும்.

(ஆ) 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு இடும் நிபந்தனைகளுக்கமைவானதாகும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிக்கப்படுவதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக மாதம்பை பிரதேச செயலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களை முறையாக பொறியிடப்பட்ட கடித உறையிலிட்டு இடது பக்கத்தில் மேல் மூலையில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு "13 ஆம் இலக்கமுள்ள பம்பல கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடப்பட்டு 2020.06.26 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பு மாதம்பை பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் மேற்குறிப்பிடப்பட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக "பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், மாதம்பை" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய செயற்படல் வேண்டும்.

5. 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்த நேரம் மனுதாரர் அனைவரும் இச் செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

இது தொடர்பாக மேலதிக விபரங்கள் மாதம்பை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

ஏ. எம். சீ. எம். பிரேமசூரிய,
பிரதேச செயலாளர்,
மாதம்பை.

பிரதேச செயலகம்,
மாதம்பை,
2020, மே 29.

**அட்டவணை**

| *இல.* | *பகுதி* | *கிராமம்* | *கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும்* | *கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா ச.* |
|---|---|---|---|---|
| 13. | பிட்டிகல் கோரளை பம்பல வடக்கு | பம்பல | 2020.06.26 காலை 10.30 மணி | 1,000.00 |

6- 107

---

## கல்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவு

*கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை 2020 – 2021*

*2020 ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் வரை*

*2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2021 யுன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள 12 மாத காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. எந்த ஒரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமப் படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக கல்பிட்டி பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.*

*3. கேள்விப் பத்திரங்களை முறையாக முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு ''............................... ஆம் இலக்க ........................ கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்'' என குறிப்பிடப்படல் வேண்டும். 2020.06.19 ஆந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன்னர் கல்பிட்டி பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடுதல் அல்லது பதிவுத்தபால் மூலம் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.*

*4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.*

*5. 2020.06.19 ஆந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் இச் செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.*

*6. இது தொடர்பான மேலதிக விபரங்களை கல்பிட்டி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 032-4934202, 032-4934205).*

எம். எம். என். சோமதிலக,
பிரதேச செயலாளர்,
கல்பிட்டி.

பிரதேச செயலகம்,
கல்பிட்டி,
2020, மே 29.

**அட்டவணை**

| இல. | பிரிவு | எல்லை | தவறணை | கேள்விப் பத்திர முடிவுத் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|---|---|---|
| 1. | கல்பிட்டி | தளுவை | கள்ளு | 2020.06.19 மு.ப.10.30 | 1,000.0 |
| 2. | கல்பிட்டி | ஏத்தாளை | கள்ளு | 2020.06.19 மு.ப.10.30 | 1,000.0 |

6-127

---

## மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேச செயலகப் பிரிவு

வாகரை கள்ளுத் தவறணைக்கான குத்தகை விற்பனை - 2020, யூலை - 2021 யூன்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982, ஒகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1982 ஆம் வருட கள்ளுத்தவறணை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கோரளைப்பற்று வடக்கு, வாகரைப் பிரதேசத்திற்குட்பட்ட வாகரை கள்ளுத்தவறணைக்கான 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2021, யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க்குறிப்பிட்ட திகதி, நேரம் வரை கோரளைப்பற்று வடக்கு பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும்போது கேள்விதாரர்கள் கோரளைப்பற்று வடக்கு, வாகரை பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 1,500) பணத்தை கோரளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டினைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற முடியும். இக்கேள்விப்பத்திரத்துடன் பணம் செலுத்திய பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2020.06.12 ஆந் திகதி முதல் 2020.06.18 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதிச் சான்றிதழானது, கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15%ற்குக் குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதிச் சான்றிதழ் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் பிழையாக நிரப்பப்பட்டிருந்தால் அவை நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் நாளில் இருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பி சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

6. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும், சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். (நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012.01.05 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)

7. ஏனைய விபரங்கள் கோரளைப் பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். கரன்,
பிரதேச செயலாளர்,
கோரளைப்பற்று வடக்கு,
வாகரை.

பிரதேச செயலகம்,
கோரளைப்பற்று வடக்கு.
வாகரை,
2020, யூன் 08.

**அட்டவணை**

| தவறணை அமைய வேண்டிய இடம் | தவறணை இலக்கம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| பால்சேனை கிராம அலுவலர் பிரிவு | TT No. 5 | 2020.06.19 | பி.ப. 2.30 மணி |

**குறிப்பு.-** 1. கேள்விச் சபை 2020.06.19 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்குக் கூடும்.
2. விற்பனைத் தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு விற்பனை 2020.06.26 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு நடைபெறும்.

6-148

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஐக்கிய இராச்சியம், No. 132, Foxeley Lane, Purely Surrey, CR8 3 NE, United Kingdom எனும் முகவரியில் வசிக்கும் வைத்தியர் நந்தின் தயா பண்டித குணவர்த்தன மற்றும் வைத்தியர் விஜிதா ரஞ்சனி காந்தி பண்டித குணவர்த்தன ஆகிய நாங்கள் இருவரும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருவதாவது, பிரசித்த நொத்தாரிசு ரீ. பீ. டி. எஸ். குணசேகர என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 483 மற்றும் 2019.06.12 ஆந் திகதி குறிப்பிட்டுள்ள மற்றும் அற்றோணித் தத்துவப் புத்தகத்தில் 2019.07.22 ஆந் திகதி கொண்ட நாள் குறிப்பேட்டு இல. 11760, தொகுதி/இருமடித்தாள் 99/280 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள விசேட அற்றோணித் தத்துவத்தினால் கொழும்பு 05, லெயார்ட்ஸ் வீதி, இல. 39 எனும் முகவரியில் வசிக்கும் ருவன் மலீ சேபாலிகா ஜயசிங்ஹ அல்லது திருமணத்திற்குப் பிறகு மெண்டிஸ் (தே. அ. அ. இல. 688520193V) என்பவருக்கு வழங்கப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்வதாக அறியத்தருகிறேன். இன்று முதல் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவதாரரால் எவ்விதத்திலேனும் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நாங்கள் பொறுப்பாக மாட்டோம் என்பதை இத்தால் தெரிவிக்கின்றோம்.

வைத்தியர் நந்தின் தயா பண்டித குணவர்த்தன,
வைத்தியர் விஜிதா ரஞ்சனி காந்தி பண்டித குணவர்த்தன.

06-40

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

குருநாகல், மாஸ்பொத்த, ரத்கரவ்வ ஐச் சேர்ந்த தேவராஜ் சரச்சந்ர ஜயலத் ஆகிய என்னால் எழுதிகையொப்பமிடப்பட்டதும் கொழும்பைச் சேர்ந்த சட்டத்தரணி பகிரங்க நொத்தாரிசு மஞ்சுலா கே. லியனகேவினால் 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி எழுதி சான்றுப்படுத்தப்பட்ட 59 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தினூடாக அலவ்வ, வெரெல்லகம எனும் முகவரியில் வசிக்கும் ஹலப்பெரும ஆரச்சிகே சுசில் லக்ஷ்மன் பொன்சேகா (தே. அ. அ. இல. 612691959V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்வதுடன் இதனகத்துப் பின்னர் 2020 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதியிலிருந்து அவர் எனது பெயரில் செய்கின்ற எந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும் நான் பொறுப்புக்கூற மாட்டேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

தேவராஜ் சரச்சந்ர ஜயலத்.

06-27

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நகர சபை இல்லம், கட்டுகுறுந்த, மொரட்டுவையில் வசிக்கும் தெல்கே வசந்தி ரேணுகா பீரிஸ் ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு திருமதி ஏ. கே. பீ. ஜீவனீ சந்தலங்கா என்பவரினால் 2019.05.06 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 104 ஆம் இலக்கமுடையதுமானதும் இல. 237, திஸ்ஸ வீதி, தங்கல்ல என்ற முகவரியில் வசிக்கும் கொஸ்கொடகே எரங்க அதுகோரள என்பவருக்கு வழங்கப்பட்டதுமான அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும் இதன் பின்னர் என் சார்பில் அவர் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் கொடுக்கல் வாங்கல்களுக்கும் பொறுப்பாளியல்ல எனவும் பொது மக்களுக்கு இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

தெல்கே வசந்தி ரேணுகா பீரிஸ்.

2020, பெப்புருவரி 24.

06-50

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹொரண, இலிம்ப, பொல்வத்தை, 2 ஆம் மாவத்தை, இல. 220ஏ எனும் முகவரியில் வசிக்கும் கண்ணங்கர ஆரச்சிகே சரோஜா ஆகிய நான், சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு எம். டீ. எம். ரீ. விஜேசிங்ஹ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 874 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தினால் பதுரலிய, கம்புராவல எனும் முகவரியில் வசிக்கும் கல்ஹேனகந்தகே தொன் துசித நயனகுமார என்பவரை எனது அற்றோணித் தத்துவகாரராக நியமித்ததை 2019.12.27 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகிறேன். இன்று முதல் எனது அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.

கண்ணங்கர ஆரச்சிகே சரோஜா.

06-98

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றைக் கூட்டிணைத்தல்

*கம்பனியின் பெயர் :* இலெவன் ஃபிறைட் இன்டர்நெஷனல் (பீவீடி) எல்டீடி

*கம்பனி இலக்கம்* : பீவீ 00221344

*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2020.03.14

*கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : ஈ 166, இசுருபுர, மாலபே

சட்டத்தரணி கே. ஏ. எம். எச். கொடிதுவக்கு,
கம்பனிச் செயலாளர்.

6-78

## பிமா லங்கா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிவீரீ) லிமிட்டெட்

பீவீ 00207162

### 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

இவ்வறிவித்தல் வெளியிடப்படும் திகதியில் இருந்து அறுபது நாட்களுக்கு மேற்படாத காலத்தினுள் நடைபெறும் அதிவிசேட பொதுக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### விசேட தீர்மானம்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 59 ஆம் பிரிவின்படி கம்பனியின் கூறப்பட்ட மூலதனமானது நாற்பத்தொன்பது இலட்சத்து பத்தாயிரம் (49,10,000) பங்குகளைக் கொண்ட பெறுமதியில் ரூபா நான்கு கோடியே தொண்ணூற்றொரு இலட்சம் (ரூபா 4,91,00,000) கொண்ட தொகையில் இருந்து இருபத்தேழு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து ஐந்நூறு (27,58,500) பங்குகள் கொண்டதும் பெறுமதியில் இரண்டு கோடியே எழுபத்தைந்து இலட்சத்து எண்பத்தையாயிரம் ரூபா (ரூபா 2,75,85,000) கொண்ட தொகையாக குறைக்கப்பட வேண்டு மென இதன்போது தீர்மானிக்கப்படும்.

சபையின் கட்டளைப்படி,

பி. டீ. ஓ. செக்கரட்ரீஸ் (பிவிரீ) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

06-156